# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2033/3 - 2017 අගෝස්තු මස 21 වැනි සඳුදා - 2017.08.21

*2033/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**மஹியங்கனை எசல உற்சவம் - 2017**

*(362 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1967, யூன் 09 ஆந் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமாகிய மஹியங்கனை யாத்திரைகள் தொடர்பான சட்டத்திலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகார கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கு அமைவாகவும் மஹியங்கனை பிரதேச செயலாளர் திசாநாயக்க முதியன்சேலாகே நிமல் திசாநாயக்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 2017 மஹியங்கனை எசல உற்சவ முகாம்கள் தொடர்பாக பின்வரும் கட்டளைகளை பிறப்பிக்கின்றேன்.*

*01. 2017, ஓகத்து 22 ஆந் திகதி மஹியங்கனை எசல உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு 2017, செத்தெம்பர் 06 ஆந் திகதி நீர் வெட்டுடன் நிறைவடையும் என்பதனை அறியத்தருகிறேன்.*

*02. மஹியங்கனை - பிபிலை வீதியில் 37 ஆவது கி. மீ. கல்லிலிருந்து தேசிய பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள 1/39 அடையாளக்கல் (போக்கு) வரையிலும், மஹியங்கனை வைத்தியசாலைக்கு முன்னால் கடிகார கோபுரத்திற்கு முன்னால் மஹியங்கனை மீகாகிவுல பாதைகள் மற்றும் புதிய வீதிக்கிடையிலான சேவை, பாதைக்கு மத்தியில் உள்ள காணியை யாத்திரிகர்கள் தங்குவதற்கான முகாமிடும் பிரதேசமாக பெயரிடுகிறேன்.*

*03. விஹார பூமி, போமர பூமி, தேவாலய பூமி, பல்லே வீதி போன்ற இடங்கள் மற்றும் அண்மித்த காணிகளில் உணவு சமைத்தலை தடை செய்கிறேன்.*

*04. மத்திய வீதியில் தூபியை நோக்கியுள்ள காணிப்பரப்பில் மற்றும் மஹர தோரணத்திற்கு இடது புறமாக என்னால் அல்லது முகாம்களுக்கு பொறுப்பான அலுவலரினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்திற்கு ஏற்ப பூக்கள் ஊதுவர்த்தி, மெழுகுவர்த்தி, சூடம், நேர்த்திக்கடன் தீர்ப்பதற்கான உருவச்சிலைகள் மற்றும் பூசைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கிறேன். மேற்படி பொருட்களை விற்பனை செய்வதற்கு நிரந்தரமாகவுள்ள 17 கட்டிடங்களை தவிர தூபியை நோக்கியுள்ள நிலப்பரப்பிற்கு அப்பால் விற்பனை செய்ய அனுமதியளிக்கிறேன்.*

*05. மேலே இரண்டாவது பிரிவின் படி முகாம் பூமி பிரதேசத்தில் என்னிடமிருந்து அல்லது முகாமுக்குப் பொறுப்பான அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கூடாரங்களில் மற்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ள 24 நிரந்தரக் கட்டிடங்களில் யாத்திரிகர்களுக்கு உணவு, பானம் பகிர்வதற்குஅல்லது விற்பனை செய்வதற்கும் அனுமதியளிக்கிறேன். பஸ்நாயக்க நிலமேயினால் பெரஹெர செல்லும் பாதையாக அறிவிக்கப்பட்டுள்ள*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பல்லே வீதி, மெதமல்வத்த, துட்டகைமுனு, ஒய்வறை வீதி, அம்மொடில்லை வீதி, பதுளை - மஹியங்கனை வீதி, போதிமலு மாவத்தை, சங்காவாசய முன்னால் உள்ள வீதி ஆகிய பாதைகளின் இருமருங்கிலும் நீர் வழிந்தோடக்கூடிய காணியில் இருந்து இருபதுஅடிக்கு அப்பால் உள்ள பிரதேசத்தை வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்குகிறேன்.

6. மேலே 4, 5 இல் குறிப்பிட்டுள்ளதன் படி முகாம் பூமியினுள்ளே வேறெந்த இடத்திலும் வியாபாரம் செய்வதை முற்றாக தடை செய்கிறேன்.

7. பிரதான வீதியில் தனிப்பட்ட வாகனங்களை நிறுத்துவதை தடை செய்கிறேன். மிதிவண்டி மற்றும் மாட்டு வண்டி உள்ளிட்ட சகல மோட்டார் வாகனங்களையும் என்னால் அல்லது முகாமுக்கு பொறுப்பான அதிகாரியினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இல்லாமல் முகாம் பூமிக்குள் செலுத்துவதை தடை செய்கிறேன்.

8. மஹியங்கனை - பிபிலை வீதியில் முன்னோக்கி நிர்மாணிக்கப்பட்டுள்ள நுழைவாயிலுக்கு அண்மையில் புனித பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி, மஹியங்கனை - மீகாகிவுல பழைய வீதி வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் உள்ள வீதி மற்றும் மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் உள்ள 1/39 அடையாளக்கல் (போக்கு) இற்கு அண்மையிலுள்ள பாதைகளினூடாக முகாம் பூமிக்குள் அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனங்களை உட்செலுத்துவதை தடை செய்கிறேன்.

9. முகாம் பூமிக்குள் வியாபாரம் செய்வதற்கு ஒதுக்கப்படும் பிரதேசங்களை குத்தகைக்கு வழங்கும் முறை தொடர்பாக என்னால் அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்தப்படும்.

10. குத்தகைக்கு பெற்றுக்கொண்ட நிலப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் தற்காலிக கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் அறிவுரைக்கு அமைவாக இருத்தல் வேண்டும். என்னால் அறிவிக்கப்படும் பட்சத்தில் எல்லா விற்பனை நிலையங்களுக்கும் அண்மையில் மலசலகூடம் ஒன்றையோ அல்லது இரு மலசல கூடங்களையோ அமைத்தல் வேண்டும். நிலங்களை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எசல உற்சவத்தின் பின் தமது தற்காலிக கட்டிடங்களை அப்புறப்படுத்திய பின்னர் முகாம் பூமிக்குள் உள்ள பொலித்தீன் உள்ளிட்ட அனைத்துக் குப்பைகளையும் சேகரித்து பொது சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைப்படி அகற்றுதல் வேண்டும்.

11. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் முகாம் பூமிக்குள் எந்தவொரு கட்டிடத்தையும் அமைப்பதை தடை செய்கிறேன்.

12. எவராலும் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி பாதையாக பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் காணி அல்லது முகாம் பூமிக்குள் ஆற்றுப்படுக்கை போன்று உள்ள இடங்களில் கூடாரங்களையோ கட்டிடங்கள் அமைப்பதையோ தடை செய்கிறேன்.

13. எவராலும் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி பாதையாகப் பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் காணி அல்லது முகாம் பூமிக்குள் ஆற்றுப்படுக்கை போன்று உள்ள இரு பக்கங்களிலும் கூடாரங்களையோ கட்டடங்கள் அமைப்பதையோ தடை செய்கின்றேன்.

**15 ஆம் ஒழுங்குவிதி (யாத்திரைகள் கட்டளைச் சட்டம்)**

(அ) எவரும் பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொண்டாலன்றி பாதையாக பயன்படுத்தப்படும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் நிலம் அல்லது முகாம் பிரதேசத்தில் ஆற்றங்கரைபோல் அமைந்திருக்கும் இடத்தை மையமாகக் கொண்டு கூடாரம் ஒன்றையோ கட்டிடம் ஒன்றையோ அமைத்தல் அல்லது விஸ்தீரணப்படுத்துப்படலாகாது.

(ஆ) பிரதேசத்தில் பட்டாசு கொழுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

(இ) பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற அலுவலர்களின் அனுமதி இல்லாமல் யாரேனும் ஒருவரால் முகாம் பிரதேசத்தில் டிக்கெட், கொடி விற்பனை செய்தல் மற்றும் எந்தவிதமான விடயத்திற்காகவும் பணம் வசூலிக்கக்கூடாது.

டி. எம். நிமல் திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
மஹியங்கனை.

**மஹியங்கனை எசல உற்சவம் - 2017**

*(362 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1955, மாச்சு மாதம் 25 ஆம் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1967, யூன் 09 ஆந் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமாகிய மஹியங்கனை யாத்திரைகள் தொடர்பான சட்டத்திலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகார கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கு அமைவாகவும் மஹியங்கனை பிரதேச செயலாளர் திசாநாயக்க முதியன்சேலாகே நிமல் திசாநாயக்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய பின்வரும் இடங்களை யாத்திரிகர்களுக்கு உணவு, பானம் வழங்குவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக ஒதுக்குகிறேன்.*

*(அ) மஹியங்கனை - பிபிலை வீதியில் 37 வது கி.மீ. கல்லிலிருந்து தேசிய பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள 1/39 அடையாளக்கல் (போக்கு) வரையிலும் உள்ள நிரந்தர அல்லது தற்காலிகக் கட்டிடங்கள்.*

*(ஆ) மஹியங்கனை - மீகாகிவுல பழைய வீதியில் வைத்தியசாலைக்கு முன்னால் கடிகார கோபுரம் வரையிலும் உள்ள பாதையின் இரு புறமும் உள்ள தற்காலிக அல்லது நிரந்தர கட்டிடங்கள்.*

*(இ) முகாமிடும் பிரதேசங்களில் யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள மைதானத்தில் என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்திற்கு அமைய அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடங்கள்.*

*மேற்குறிப்பிட்ட இடங்கள் அன்றி முகாம் பிரதேசத்திற்குள் ஏனைய எந்தவொரு நிலையத்திலும் காணி வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.*

*டீ. எம். நிமல் திசாநாயக்க,*
*பிரதேச செயலாளர்,*
*மஹியங்கனை.*

*பிரதேச செயலகம்,*
*மஹியங்கனை,*
*2017, ஓகத்து 18.*

*09- 01*